மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | OS 189/22 |
| பெயர் | : | வீரமாமுனிவர் (PW3) |
| த/பெ. | : | |
| Calling | ; | கிராமநிர்வாக அலுவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20 th day of November 2024

<u>முதல் விசாரணை</u>

1)நான் பாஞ்சலாங்குறிச்சி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன்.நான்நீதிமன்ற அழைப்பாணை பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.**(மேற்படி அழைப்பாணை சாசா ஆவணம் 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2)கவர்னகிரி நத்தம் சர்வே எண் 402 ன் புல வரைபடம் மற்றும் அ பதிவேட்டினை நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேன்.அது அரசு புறம்போக்கு என்று உள்ளது. **(மேற்படி புல வரைபடம் உண்மை நகல் சாசா ஆவணம் 2 ஆகவும் மற்றும் அ பதிவேட்டின் உண்மை நகல் சாசா ஆவணம் 3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

3)கவர்னகிரி நத்தம் சர்வே எண் 613/1 ன் புல வரைபடம் மற்றும் அ பதிவேட்டினை நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேன்.613/1 என்பது 613/22,613/23 என உட்பிரிவு செய்யப்பட்டு 1251 உ.பேச்சியம்மாள் என்பவரின் பெயரிலும் 1252 ப.செல்வராணி என்பவர் பெயரிலும் பட்டா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. **(மேற்படி புல வரைபடம் உண்மை நகல் சாசா ஆவணம் 4 ஆகவும் மற்றும் அ பதிவேட்டின் உண்மை நகல் சாசா ஆவணம் 5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1)சர்வே எண் 402 ன் புல வரைபடம் மற்றும் அ பதிவேட்டானது 1996 வருட ஆவணம்.சர்வே எண் 613/1 ன் புல வரைபடம் மற்றும் அ பதிவேட்டானது 1996 வருடத்திற்கானது.சர்வே எண் 402, சர்வே எண் 613/1 கான இரண்டு

ஆவணங்களும் ஒரே காலகட்டத்தில் தயார் செய்யப்பட்டது ஆனால் இரண்டும் வெவ்வேறு இடம்.

2)சர்வே எண் 613/1 2017 ஆம் வருடத்தில் 613/22,613/23 ஆக உட்பிரிவானது.சர்வே எண் 613/1 ன் மொத்த விஸ்திரனம் 00773 சதுரமீட்டர்.சர்வே எண் 613/1 15.08.2017 அன்று 8A/182 என்ற ஆவணத்தின் படி உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது.புல எண் 613/3 சண்முகத்தாய் என்பவரின் பெயரில் உள்ளது.புல எண் 613/4 அரசு சர்க்கார் காலி மனை.பாஞ்சலாங்குறிச்சி கிராமத்தில் கவர்னகிரி மஜ்ஜிரா ஆகும்.கவர்னகிரி தனி வருவாய் கிராமம் கிடையாது.நத்தம் புல எண் 402 கீழ்ப்பக்கதில் நத்தம் புல எண் 613,614,616 ஆகியவை உள்ளது.

3)நத்தம் புல எண் 613/3 ற்கு பட்டாவானது நத்தம் செண்டில் மெண்ட் காலத்திலேயே கொடுக்கப்பட்டுள்ளது.வீடு கட்டி அனுபவம் செய்து வந்ததின் அடிப்படையிலும் ஆவணங்கள் வைத்திருந்தால் அதன் அடிப்படையிலும் பட்டா வழங்கப்பட்டிருக்கும்.புல எண் 613/3 , 613/4 க்கு வடக்கே புல எண் 613/1 உள்ளது.அந்த புல எண் 613/1 ஆனது தான் உட்பிரிவு செய்யப்பட்டு 613/22,613/23,613/25 என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது.புல எண் 613/3 ல் உள்ள பட்டாதாரர்களுக்கு அதற்கு வடக்கே அவருக்கு உரிமம் மற்றும் அனுபவம் கிடையாது என்றால் அது அரசு புறம்போக்கு இடம்.வடக்கில் உள்ள இடத்தில் வாதிகளாகிய சீதாலெட்சுமி மற்றும் செல்லையாவிற்கு உரிமம் மற்றும் அனுபவம் உள்ளதா என்றால் அது அரசு புறம்போக்கு இடம்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.